செ.வெ.எண் : 21 நாள்: 07.11.2021

# பத்திரிக்கை செய்தி

அரசாணை எண்:644, வருவாய் மற்றும் பேரிடர் துறை, நாள்:11.10.2021-ன் படி "விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்" தொடர்பாக 2014 முதல் 2016 வரை தமிழ்நிலம் மென்பொருளில் கிராம கணக்குகள் பதிவேற்றம் செய்த போது ஏற்பட்ட கீழ்க்கண்ட பட்டா பிழை திருத்தங்கள் (கணினி பிழைகள் மட்டுமே) செய்திட கிராமங்கள் தோறும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

1. உட்பிரிவு எண்-புல எண் தவறாக இருந்தால்
2. பரப்பு திருத்தம்
3. பட்டாதாரர் பெயர் (அ) தந்தை - பாதுகாவலர் பெயர் திருத்தம்
4. உறவுமுறை திருத்தம்
5. பட்டாவில் உள்ள கலங்கள் காலியாக குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் 6. பரப்பு பட்டாதாரர் பெயர் அருகிலுள்ள பரப்பு-பட்டாதாரர் பெயர் மாறி இருப்பது (Interchanged),

எதிர்வரும் வாரத்தில் 10.11.2021 அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் கொத்தமங்கலம், அகரகொத்தகை, திட்டச்சேரி, ஆகிய கிராமங்களிலும், கீழ்வேளூர் வட்டத்தில் வெங்கிடங்கால், ராதாமங்கலம் ஆகிய கிராமங்களிலும், வேதாரணியம் வட்டத்தில் தேத்தாகுடி வடக்கு, தேத்தாகுடி தெற்கு, செம்போடை ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் மேல்வாழ்க்கரை கிராமத்திலும் நடைபெற உள்ளது. மேலும் 12.11.2021 அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் சேகல், திருமருகல், பண்டாரவாடை, குருவாடி, போலகம், மருங்கூர் ஆகிய கிராமங்களிலும், கீழவேளூர் வட்டத்தில் பாலக்குறிச்சி, ஒட்டத்தட்டை, கீழப்பிடாகை ஆகிய கிராமங்களிலும், வேதாரண்யம் வட்டத்தில் நாலுவேதபதி. கள்ளிமேடு ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் காருகுடி கிராமத்திலும் நடைபெற உள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிராம பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**